1973 பிப்ரவரி 13]

பயிர்வகை.	1970–71.	1971–72.
	(எக்கர் லட்சத்தில்.)	
வேர்க்கடலை	1·025	4·410
நெல்	5·889	4·625
பருத்தி	0·057	0·768
உருளைக்கிழங்கு	0·003	0·768
மொத்தம் ..	6·974	9·803

(இ) ஆம். இவ்வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு உழவர்களிடம் ஒப்புதல் தனித்தனியே பெறப்படவில்லையென்று சில உழவர்கள் முறையீடு செய்துள்ளனர்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பல லட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு அடித்து இருப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள். அதனால் நாம் கணக்கெடுத்த நிகர பலன் கிடைத்து இருக்கிறதா என்பதை அரசாங்கம் ஆராய்ந்தது உண்டா? அதன் பலன் குறைவு தான் என்றும், விவசாயிகள் ஹெலிகாப்டர் மூலம் தெளிப்பது அதிகமான பலனைத் தரவில்லை என்றும் கூறுகிறார்கள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த விமானம் மூலம் மருந்து தெளிக்கும் திட்டம் 1961-62-ம் ஆண்டில் துவங்கப்பட்டு 1971-72-ம் ஆண்டு வரையில் நடைபெற்று வந்தது. 1961-62 லிருந்து விவசாயிகளுக்கு சரியான பலன் கிடைத்து இருக்கிறது என்ற காரணத்தால் தான் ஆண்டுதோறும் அது அதிகமாக்கப்பட்டு இறுதியில் சென்ற ஆண்டு 9803 ஏக்கருக்கு தெளிக்கப்பட்டது. விவசாயிகள் அதன் மூலம் பலன் பெற்று இருக்கிறார்களா என்று உணவு உற்பத்தியைக் கணக்குப் பார்த்தால், 1961-62 முதல் 1971-72 வரை பார்த்தால் பலன் கிடைத்து இருக்கிறது என்பது நன்கு தெரியும். பெரும்பாலான விவசாயிகள் நன்மை பெற்று இருக்கிறார்கள். ஒரு சிலர் எப்படி தெளிக்கப்படுகிறது என்பதை நாங்கள் பார்க்கவில்லை என்று சொல்லப்பட்ட காரணத்தாலும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் பல பேர் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று, நாங்கள் எல்லாம் எங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டு இருக்கிறோம், குத்தகைதாரர்

களிடத்தில் தான் பணம் வசூல் செய்யவேண்டுமென்றும், நிலச்சொந்தக்காரர் களிடத்தில் வசூல் செய்யக் கூடாது என்றும் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். இன்னும் அது முடிவடையாமல் அப்படியே இருந்து கொண்டு இருக்கிறது. இதற்கிடையில் அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலனை செய்து, சென்ற ஆண்டு தமிழக அரசு ஒரு முடிவு எடுத்தது. விவசாயி களிடமிருந்து அல்லது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தோ, அல்லது ஊராட்சி மன்றங்களிலிருந்தோ தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது செய்யப்பட்டாலும், விவசாயிகளுக்கு அது போதிய மன நிறைவை ஏற்படுத்தவில்லை என்ற காரணத்தால், கிரௌண்ட் ஸ்பிரே அவர்களே தெளித்துக்கொள்வது என்று முடிவு எடுத்து, 1972-73-ல் விமானம் மூலம் தெளிக்கும் முறையைக் கைவிடுவது என்று முடிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் பலன் அடைந்து இருக்கிறார்களா என்று கேட்டார்கள். பலன் அடைந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1972-73-ல் சுமார் 10 லட்சம் ஏக்கருக்கு இம்மாதிரி விமானம் மூலம் தெளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஒரு

.ப.
-30 ஏக்கராவுக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது? அதற்கு முந்திய வருஷம் கொடுத்ததிலிருந்து அதிகமாகக் கொடுக்கப்பட்டதா, அல்லது அவ்வளவு தான் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆரம்ப காலத்தில் இருந்து பிக்ஸட் விங் அல்லது ஹெலிகாப்டர் மூலம் தெளிக்கப்பட்டு வந்ததற்கு ரூ. 8, 10 என்ற அளவில் கொடுக்கப்பட்டு வந்தது. சென்ற ஆண்டு விமானக் கம்பெனி அத்தனை பேர்களும் ஒரு யூனியனை சேர்ந்து அவர்கள் அதிகத் தொகை வேண்டும், இப்பொழுது பெட்ரோல் விலை அதிகமாகியிருக்கிறது, மற்ற செலவும் அதிகமாகியிருக்கிறது என்று கூட்டாக இருந்து மனுப் போட்டிருந் தார்கள். அதைக் குறைக்கவேண்டும் என்று சொல்லி வேளாண்மைத் துறை இயக்குனர் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி கடைசியில் ஒரு முடிவு செய்தார். ரூ. 11 கொடுப்பது என்று முடிவு செய்து, அதன்படி தெளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தெளிப்பு நடக்கிற இடங்களில் இருக்கிற ஃபாலோ லாண்ட்ஸ் கணக்கிடப்பட்டிருந்ததா? அப்படியிருந்தால் அதன் விவரம் என்ன? அதுமட்டுமல்லாமல் அமைச்சர் அவர்கள் உற்பத்தி பெருகி யிருக்கிறது என்று சொன்னார்கள். எத்தனை சதவிகிதம் உற்பத்தி பெருகி யிருக்கிறது என்பதையும் தெரிவிப்பார்களா?

1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து தான் செய்தோம் என்று நான் முதலிலே குறிப்பிட்டேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அவைகள் அரசுக்கு வந்து, வேளாண்மைத் துறை மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. புகார்கள் வந்தது பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக 'என்னுடைய நிலத்தில் நான் இன்னும் பயிர் செய்யவில்லை. என்னுடைய நிலத்தில் ஒரு பகுதியிலே வாழை இருக்கிறது, ஒரு பகுதியிலே கரும்பு இருக்கிறது. ஆனால், மொத்தமாக தெளித்துவிட்டு, எல்லோருக்கும் சேர்த்து நெல் விவசாயிகளிடம் வசூல் செய்கிறார்கள் என்ற குறைபாடு வந்தது. அவைகளையெல்லாம் பரிசீலித்த பிறகு அது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உற்பத்தி அளவைப் பற்றி சொன்னார்கள். 58 லட்சம் டன் உற்பத்தியிலிருந்து சென்ற ஆண்டு 73 லட்சம் டன் உற்பத்தி அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, சில விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து புகார்கள் வந்ததன் பேரில் விமானம் மூலம் மருந்து தெளிப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு மாறாக கிரௌண்டு ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். கிரௌண்டு ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிப்பதில் அந்த நோயை அறவே போக்கிவிட முடியாது. காரணம், ஒருவர் மருந்து அடிக்காவிட்டாலும் கூட அந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. சென்ற வருஷம் எங்கள் பகுதியில் கடலைப் பயிர் அது போல் அழிந்துவிட்டது. ஆகவே, யாருடைய புகாரையும் எதிர்பார்க்காமல், யாருடைய ஆதரவையும் எதிர்பார்க்காமல், அரசாங்கம் கண்டிப்பாக விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்கு வருங்காலத்தில் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது கோவை மாவட்டத்திலிருந்தும், வேறு சில மாவட்டங்களிலிருந்தும் பூச்சி மருந்து ஆகாய விமானத்தின் மூலம் தெளிப்பதை நிறுத்தியது தவறு என்று எங்களுக்கு மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதாவது கம்பளிப்பூச்சியினால் வேர்க்கடலை அதிகமாகப் பாதிக்கப்படும். அதற்காக ஆங்காங்கு நாம் தீவிர திட்டத்தின் மூலம் எப்படியும் அடித்துத் தீரவேண்டும் என்று சொல்லி இந்த ஆண்டு 50,000 ஏக்காராவுக்கு திட்டமிட்டு, 22,000 ஏக்கருக்கு இதுவரையில் தெளிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல ஒருவர் தெளிக்காமல் போனால் கூட, பூச்சி பரவிடும். இருந்தாலும், பெரும்பாலானவர்